Registeardas a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 03 ( 16 - 03 - 1992 ) திங்கட்கிழமை ஓசை: 27

நல்லூர் இளை நூலகம் யாழ்ப்பாணம்

## தீவகத்திலிருந்து 20 நோயாளர் யாழ்ப்பாணம் வந்தனர்

தீவகப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டிருந்த இருபது நோயாளர்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ். நகருக்குள் அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு அழைத்து வரப்பட்ட நோயாளர்களில் கடும் சுகயீனமுற்றிருந்த நான்குபேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த ஒருவருடத்திற்கு முன் சிறிலங்கா இராணுவத்தினர் காரைநகரை முற்றுகையிட்ட வேளையில் இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தின்போது தனது இடதுகாலை இழந்த நடராசா (வயது 60) (4ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வை அரசு இழுத்தடித்தால் தமிழீழம் அமைவது தவிர்க்கமுடியாதது

## கிறிஸ்தவ நல்லெண்ணக் குழுவிடம் விடுதலைப் புலிகள் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் காலவரையின்றி இழுத்தடித்தால் நாடு பிரிந்து தமிழீழ அரசு உருவாவதை தவிர்க்க முடியாது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக் குழுவிடம் எடுத்துரைத்தனர்

நேற்று விடுதலைப்புலிகள் மாவட்ட அரசியல் செயலகத்தில்விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக்குழுவைச் சந்தித்து புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டைஎடுத்து விளக்கினர்.

இச்சந்திப்பின்போது கிறிஸ்தவ நல்லெண்ணத் தூதுக்குழுவின் தரப்பில், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் போல் கஸ்பஸ், மெதடிஸ் திருச்சபையைச் சேர்ந்த அதன் உப தலைவர் திருமதி இவான், அங்கிலிக்கன் திருச்சபையைச்சேர்ந்த வண டாக்டர் றியான்சி பேரேரா, வண. டுலிப் சிக்கோறாவும், விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

''விடுதலைப் புலிகள் இயக்கம் நீண்டகாலமாகவே சமாதானத்தின்கதவுகளை திறந்துவிட்டிருக்கிறது. சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருந்தது. ஆனால் சிறிலங்கா அரசு சமாதான வழிமுறைகளைப் புறக்கணித்து இராணுவ அணுகுமுறையை தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வருகிறது சிறிலங்கா அரசின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமின்றி அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை அரசாங்கம் இழுத்தடித்து வருமானால் நாடு பிளவுபட்டுத் தமிழீழத் தனியரசு உருவாகுவது தவிர்க்க [4ஆம் பக்கம் பார்க்க]

## களத்தில் நின்று வேங்கைகள் புலிகளின் ஒலிப்பதிவுநாடா நேற்று வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

''களத்தில் நின்று வேங்கைகள்'' என்ற ஒலி பதிவுநாடா வெளியீட்டு விழா நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

மணலாறு யுத்தத்தில் வீரச்சாவடைந்த போராளிகளின் ஞாபகார்த்தமாக இந்த இசை நாடா வெளியிடப்பட்டிருக்கிறது.

மாலை 3.00 மணியளவில் ஆரம்பமான இந்த விழாவின் ஆரம்பத்தில் மகளிர் படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜெயந்தியும், கடற் புலிகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவை வெளியேற்ற வேண்டும் - பௌத்தபிக்கு கோரிக்கை

(கொழும்பு)

பௌத்தர்களுக்கு உரித்தான புராதன பௌத்த விகாரைகள் நாசமாக்கப்பட்ட போது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்று பொலநறுவை மாவட்ட பிரதான சங்க நாயக்கர் கும்பக்கடவல பிரானந்த தேரோ கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமெனவும், மனித நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தமிழ் மக்களைப் பற்றியே கவலை கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## 3 மீனவரைக் காணவில்லை கடற்படையால் கைது?

(யாழ்ப்பாணம்)

செல்லையா (வயது 40) அகிய

## வீரவணக்கம்

வீரவேங்கை வேணு

## பாராளுமன்ற தெரிவுக் குழுவின் யாழ். விஜயத்திற்கு அரசு நிபந்தனை

### எழுத்தில் அழைக்குமாறு வற்புறுத்து?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் நேரடியாக அனுப்பினால் மட்டுமே அவர்களின் நிலைப்பாட்டை தெரிவுக்குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதா அல்லது தெரிவுக்குழு முன்தோன்றி புலிகள் தமது நிலைப்பாட்டை விளக்க அனுமதி அளிப்பதா என்றவிடயம் குறித்து விடுதலைப் புலிகள் நேரடியாக, உத்தியோகபூர்வமாக தெரிவுக் குழுவோடு தொடர்பு கொண்ட பின்னரே முடிவு செய்யப்படும் எனவும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அன்னை பூபதியின் உருவப் படம் 18.03.92 அன்று ஈழநாதத்தில் வெளிவரவுள்ளது. பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

## உண்ணா விரதிகள் ஆஸ்பத்திரியில் அனுமதி

இலங்கைக்கு தம்மை அனுப்ப வேண்டும் அல்லது மண்டபம் அகதி முகாமில் தங்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரி இராமநாதபுரம் சப்ஜெயிலில் உண்ணாவிரதம் இருந்து வரும் முப்பத்தியொரு இலங்கைத் தமிழர்களில் நால்வர் இராமநாதபுரம் மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. மயக்கம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு தனியான பொலிஸ் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு உள்ளது.

(கொழும்பு)

பௌத்தர்களுக்கு உரித்தான புராதன பௌத்த விகாரைகள் நாசமாக்கப்பட்ட போது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன? என்று பொலநறுவை மாவட்ட பிரதான சங்க மகாநாயக்கர் கும்பக்கடவல பிரானந்த தேரோ கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமெனவும், மனித நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தமிழ் மக்களைப் பற்றியே கவலை கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# 3 மீனவரைக் காணவில்லை

## கடற்படையால் கைது?

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீனவர் மூவரைக் கடந்த மூன்று நட்களாகக் காணவில்லை. இவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது

குருநகர் பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மீன் பிடிப்பதற்காக பாலைதீவு நோக்கிப் படகில் சென்ற அ. இராசக்கோன் (வயது 42) ரா. கொன்சன் (வயது 15) செல்லையா (வயது 40) ஆகிய மூவருமே இன்றுவரை வீடு திரும்பவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இவர்கள் மீன்பிடித்து மறுநாள் திரும்பி வருவது வழக்கம். ஆனால் இம்முறை மூன்று நாட்களாகத் திரும்பி வராமையால் இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

(ச, க 21)

இச்சந்திப்பின்போது கிறிஸ்தவ நல்லெண்ணத் தூதுக்குழுவின் தரப்பில், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த வண. டாக்டர் போல் கஸ்பஸ், மெதடிஸ் திருச்சபையைச் சேர்ந்த அதன் உப தலைவர் திருமதி இவான், அங்கிலிக்கன் திருச்சபையைச்சேர்ந்த வண. டாக்டர் றியான்சி பேரேரா, வண. டுலிப் சிக்கோறவும், விடுத

# வீரவணக்கம்

## வீரவேங்கைவேணு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று சுற்றிவளைக்க முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை வழிமறித்துஇடம்பெற்ற தாக்குதலின் போது வீரவேங்கை வேணு (சிவலிங்கம்-சுந்தரமூர்த்தி) வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இவருக்குவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# பாராளுமன்ற தெரிவுக் குழுவின் யாழ். விஜயத்திற்கு அரசு நிபந்தனை

## எழுத்தில் அழைக்குமாறு வற்புறுத்து?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் நேரடியாக அனுப்பினால் மட்டுமே அவர்களின் நிலைப்பாட்டை தெரிவுக்குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள் நம்புகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாட பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தூதுக் கோஷ்டி ஒன்றினை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதா அல்லது தெரிவுக்குழு முன்தோன்றி புலிகள் தமது நிலைப்பாட்டை விளக்க அனுமதி அளிப்பதா என்றவிடயம் குறித்து விடுதலைப் புலிகள் நேரடியாக, உத்தியோகபூர்வமாக தெரிவுக் குழுவோடு தொடர்பு கொண்ட பின்னரே முடிவு செய்யப்படும் எனவும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தங்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரி இராமநாதபுரம் சப்ஜெயிலில் உண்ணாவிரதம் இருந்து வரும் முப்பத்தியொரு இலங்கைத் தமிழர்களில் நால்வர் இராமநாதபுரம் மாவட்ட தலைமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. மயக்கம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு தனியான பொலிஸ் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு உள்ளது.

# மாவீரர்படிப்பகம்

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மாவீரர் படிப்பகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது

சமகாலத்தில் வெளியிடப் படும் சிறந்த நூல்களும் சஞ்சிகைகளும் இப்படிப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இரவல் கொடுக்கும் பகுதியும் இங்கு இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் உற்பத்தி பாதுகாப்பு; புலிகள் தீவிர அக்கறை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்கும் முயற்சியில் தமிழீழவிடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நோக்கத்துடன் சிறிலங்காவிலிருந்து வரும் சில பொருள்களுக்கு வரிவிதிப்பதென அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டாக மேற்படி பொருள்களை சிறிலங்காவிலிருந்து கொண்டுவந்தால் அவை பறிமுதல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உள்ளூர் உற்பத்தியைப்பாதுகாப்போம் என்ற தலைப்பின்கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் கொள்கை முன்னெடுப்பு பிரிவு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. அப்பிரசுரத்தில்,

இன்றைய நிலையில், நாம் அத்தியாவசியமான, அத்தியாவசியமற்றபல பொருள்களுக்கு சிறிலங்காவையே எதிர்பார்த்து நிற்கின்றோம். ஆனால் பல்வேறு பொருள்களை முழுமையாகவோ, பகுதியாகவோ எமது மண்ணிலேயே உருவாக்கிக்கொள்ளும் ஆற்றலைஎமது மக்கள் கொண்டுள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக எம்மீது சுமத்தப்பட்ட பொருளாதார முற்றுகையின்போது, இங்கு பல்வேறு உற்பத்தியாளர்கள் தோன்றி, தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தி, எமது தேவைகளை நிரப்பியதை நீங்கள் அறிவீர்கள். எமது தேசம் பொருளாதார ரீதியாக சீர்குலைவும்; இதன் மூலம் எமது மக்கள் தனது காலில் மண்டியிடுவார்கள் என்று மனப்பால் குடிக்க எதிரி தான் எம்மீதுதிணித்த பொருளாதாரத்தடையினால் இன்று தானே பாதிக்கப்பட்டி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# குடிசைகள் யாவும் தீக்கிரை; பாடசாலைகளில் இராணுவம்

## சுடுகாடுபோல் காட்சியளிக்கும் காரைநகர்

காரைநகர் முழுவதும் சுடுகாடுபோல் காட்சியளிக்கிறது. எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரின் நடமாட்டமாகவே உள்ளது. குடிசைவீடுகள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காரைநகரிலிருந்து இராணுவத் தாக்குதலால்தனதுஇடது காலை இழந்து தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வயோதிபரான நடராசா நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்:

அங்குள்ள பாடசாலைகள் அனைத்தும் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளன. தளபாடங்கள் விறகாக பயன்படுத்தப்படுகின்றதாகவும் ஆவணங்கள் எரிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு இராணுவத்தினர் வாகனங்களில நடமாடித்திரிவதாகவும் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கு காணப்படுவதாகவும் கூறியதுடன் பாலர் பாடசாலை மட்டுமே அங்கு காலை ஒன்பது மணிவரை நடைபெறுவதாகவும் இவர்களுக்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்கள கல்வி கற்பிப்பதாகவும் தெரிவித்தார். இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை எனவும் கூறினார்.

அறுநூறுக்கு மேற்பட்ட பொதுமக்கள் அங்கு தங்கியிருப்பதாகவும், இவர்களுக்கு மிகக்குறைந்தளவு உணவுப் பொருள்களை வாரத்தில் சனிக்கிழமைகளில் இராணுவத்தினர் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

வெளிவந்துவிட்டது
ஈழநாதம் வெளியீடான
காலமும் கோலமும்
ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்
கிடைக்குமிடம் :-
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
புகழ்பெற்ற புத்தக வியாபாரிகள்
சுன்னாகம்

# இராணுவ சுற்றிவளைப்பு முறியடிப்பு 4 பொதுமக்கள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல கிராமங்களை நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்டனர். இந்த சுற்றிவளைக்கும் முயற்சி விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது. இதனால் முகாமிற்கு பின்வாங்கிச்சென்ற இராணுவத்தினர் நான்கு அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டுக்கொன்றதுடன் ஐந்து பேரைக் கைது செய்து களுவாஞ்சிக்குடி முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இச் சுற்றிவளைப்பு முயற்சியை முறியடிக்க ஏற்பட்ட

## போராளி ஒருவர் வீரச்சாவு

மோதலில் ஒரு வீரவேங்கை வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்றுக் காலை 7 மணியளவில் களுவாஞ்சிக்குடி, 36 ஆம் கிராமம், பெரியபோரதீவு, வெல்லாவெளி, பாலையடி வெட்டை ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் 600பேர் பல்வேறு பகுதிகளூடாக வந்த தமிழ்க் கிராமங்களைச் சுற்றிவளைக்க முயன்றனர்.

இவர்களை விடுதலைப் புலிகள் 40 ஆம் கிராமப்பகுதிகளில் வைத்து வழிமறித்து கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். சிலமணிநேரம் இடம் பெற்ற இத்தாக்குதல் களுக்கு ஈடுகொடுக்க முடி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இரு பொலிஸ் அதிகாரிகள் மட்டக்களப்பில் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கரையோரப்பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். வேறு இருவர் காயமடைந்துள்ளனர் என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

## விசாரணை நீடித்தால் அரைமாதச் சம்பளம்

(கொழும்பு)

விசாரணை ஆறு மாதங்களுக்கு மேல் நீடித்தால் விசாரணையிலுள்ள அரச ஊழியர்களுக்கு அரைமாத சம்பளம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது அரச ஊழியர்கள் குற்றச்சாட்டுக்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்டு விசாரணை ஆறுமாதத்திற்கு மேல் நீடித்தால் அரைமாதச் சம்பளம் வழங்கப்படவேண்டுமென பொது நிருவாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ d BASE 111+
★ LOTUS 1-2-3
★ WORD STAR 2000+

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

யாழ்., வடமராட்சியில்:-
16-03-1992 (திங்கள், புதன், வெள்ளி)
21-03-1992 (சனி, ஞாயிறு)

செய்முறைப் பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவி கொண்டு வழங்கப்படும்




**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,**


இல. 37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சதா பொன்ஸ்,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

[சி/4054]



## ஓராண்டுநிறைவில் உனக்கு எங்களது கண்ணீர் மாலை




# நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் நாளை ஆரம்பம்

[கொழும்பு]

சிறிலங்கா அரசாங்கத்தின் மீதும் நிதியமைச்சர் டி. பி. விஜேதுங்க மீதும் எதிர்க்கட்சி எம். பி.க்களால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நாளை செவ்வாய்க்கிழமை விவாதத்திற்கு கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை 9.00 மணிக்குப் பாராளுமன்றம் கூடியதும் எதிர்க்கட்சி எம். பி.க்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபை ஒழுங்குப் புத்தகத்தில் முதலாவது இடத்தையும் நிதி அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

## கண்டெடுக்கப்பட்டது

அன்னலிங்கம் கிருஷ்ண பிள்ளை என்பவரின் அடையாள அட்டை வீதியோரம் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## அபி.திட்டத்தை விரிவுபடுத்த 'யு. எஸ். எயிட்' நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு 'யு. எஸ். எயிட்.நிறுவனம் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அதிக எண்ணிக்கையான விவசாயிகளை யு. எஸ். எயிட் நிறுவனத்தின் விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். அத்துடன் திட்டத்தில் பங்குபற்றும் விவசாயிகளுக்கு மேலதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய வசதிகள் பற்றியும் மேற்படி நிறுவன அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்வாண்டுக்கான பெரும்போக விவசாயச் செய்கை ஆரம்பிக்கப்படும் போது விரிவாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. (க)

## காடுகள் எரிந்தன

தலவாக்கொல்லையிலுள்ள சென் கிளாயர்ஸ் நீர்வீழ்ச்சியைச் சுற்றவுள்ள பகுதிகளிலும் நீரேந்துப் பகுதிகளிலும் உள்ள காடுகள் தீப்பிடித்து எரிந்து போயின.

சில விஷமிகள் வேண்டுமென்றே இக்காடுகளில் தீ வைத்ததாகவும் தற்பொழுது நிலவும் கடும் வரட்சி தொடரின் இந்த நீர் வீழ்ச்சி வற்றி விடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தீப அரங்கிசை

மாதம்தோறும் பௌர்ணமி தினத்தன்று நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் தீப அரங்கிசை வரும் புதன்கிழமை 18 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இளங்கலைஞர் பிரம்மசிறி மகாதேவா சோமசுந்தர சர்மா அவர்களின் வீணை இசை பக்கவாத்திய சகிதம் இடம் பெறவுள்ளது.

## யாழ்.மத்தி-சென்பற்றிக்ஸ் கிரிக்கெட் போட்டி மத்திய கல்லூரி வெற்றி

[யாழ். விளையாட்டு நிருபர்]

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி சென்பற்றிக்ஸ் கல்லூரியை 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இப் போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை 13 ஆம் திகதியும், சனிக்கிழமை 14 ஆம் திகதியும் பெருந்திரளான கிரிக்கட் ரசிகர்களின் மத்தியில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்வன் மக்சி ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களைப் பெற்றார். செல்வன் நிசாந் இவருக்கு துணையாக நின்று 41 ஓட்டங்களைப் பெற்றார். யாழ். மத்திய கல்லூரியின் அணித்தலைவர் செல்வன் பிரபாகரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி தனது முதலாவது இன்னிங்

சென் பற்றிக்ஸ் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் மொத்தம் 61 ஓட்டங்களைப் பெற்றது. யாழ். மத்திய கல்லூரியின் சிறப்பான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒன்றுக்குப் பின் ஒன்றாக விக்கெட்டுகள் சரிந்தன. செல்வன் பிரபாகரன் 3 விக்கெட்டுக்களையும், செல்வன் லக்சுமிகரன் 4 விக்கெட்டுகளையும், செல்வன் ரகுதாஸ் 2 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

யாழ்.மத்திய கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 19 ஓட்டங்களைப் பெற்றது.

திரு. நந்தகுமாரும், திரு. செல்வராசாவும் மத்தியஸ்தம் வகித்தனர். (42)

## பாடசாலை சேதம்

(வவுனியா)

விமானக் குண்டு வீச்சு தாக்குதலினால் தவசியாக்குளம் பாடசாலை சேதமடைந்தது.

இருதடவைகள் இப்பாடசாலை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அது முற்றாகச் சேதமடைந்துள்ளது.

ஆயிரத்திற்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் தாக்குதல் நடைபெறும் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்றிருப்பது குறிப்பிடத்தக்க. (தி)

## பெயர்களைப் பதிவு செய்ய 30 இடங்களில் பணியகம்

(கொழும்பு)

வளைகுடா நெருக்கடியின்

...டுள்ளதாகவும்.

பெயர்களை பதிந்து கொள்

## இலங்கை மீதான ஜப்பானின் தாக்குதலை நினைவு கூர படைவீரர் இலங்கை விஜயம்

[கொழும்பு]

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானியபோர் விமானங்கள் இலங்கையில் நடத்திய தாக்குதல்களின் ஐம்பதாவதுவருடத்தினை நினைவு கூருவதற்காக நேச நாடுகளின் நூற்றி ஐம்பது முன்னாள் படைவீரர்கள் இலங்கை வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 23 ஆம் திகதி முதல் ஏப்பிரல் 9 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இந்த ஞாபகார்த்த வைபவங்களில் பிரித்தானிய, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் டச்சு முன்னாள் படை வீரர்கள் கலந்து கொள்வர்.

ஜப்பானிய போர் விமானங்கள் கொழும்பு மீது 1942 ஆம் ஆண்டு ஏப்பிரல் 4 ஆம் திகதியும், திருக்கோணமலை துறைமுகம் மீது 9 ஆம் திகதியும் தாக்குதல்களை நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

போரின் போது பலியான நேசப் படைகளின் வீரர்களின் கல்லறைகளுக்கு இவர்கள் விஜயம் செய்வர்.

## கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கான கரப்பந்து பயிற்சி முகாம் இன்று ஆரம்பமாகின்றது. இம் முகாமின் அங்குரார்ப்பண வைபவம் பிற்பகல் 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் உடற்கல்வித் துறை உதவிப்பணிப்பாளர் திரு கே. நாகமணி அவர்களின் தலைமையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு அவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி நிலைய உடற்கல்வி இணைப்பாளர் திரு. வ. முருகேசு இப் பயிற்சி நெறியை நெறிப்படுத்துகின்றார்.

இதனைத்தொடர்ந்துவட்டுக் கோட்டை இந்துக்கல்லூரியிலும், யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் அவ்வப் பகுதி வலய மாணவர்களின் பயிற்சிப் பாசறை தொடர்ந்து நடைபெறும்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் சகல மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளக் கூடியதாக பாடசாலை அதிபர்கள்மாணவர்களை அனுப்பி வைக்கவேண்டும் எனப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி.வே.மகேசவேலு பணித்துள்ளார்.


## நினைவு கூருகின்றோம் 1992-03-16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்திப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**பரன்** (வேலுப்பிள்ளை தர்மலிங்கம் - தண்ணீருற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு)

வளலாயில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**சங்கர்** (பாலகிருஸ்ணன் சந்திரசேகரி - தம்பசிட்டி, பருத்தித்துறை.)

1987 ஆம் ஆண்டு தவுடாப்பிட்டியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**2-ம் லெப். ரவி** (தேவராஜ் - அக்கரைப்பற்று, 07, அம்பாறை.)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது பயிற்சி முகாமொன்றின் மீது



## வீரவேங்கை சுசின்

(கந்தசாமி சிவகுமார்)

வீரப்பிறப்பு 12. 05. 1970

வீரச்சாவு 28. 03. 1991

திதி 16. 03. 1992

உன்னைப் பெற்றெடுத்த பெற்றோர்க்கு
ஆசைக்கு இளைய மகனாய்
உன்னிரு உடன்பிறப்புக்களுக்கு
அருமைத் தம்பியாகப் பிறந்தாயடா
சிரித்த முகத்தோடு சிரிப்பான
வார்த்தைகள் கூறிவிட்டு
தியாகத் தலைவரின் வீரப்புலியோடு
வீரமிகு பாதையிலே புறப்பட்ட மாவீரா சுசினே
உன் கடமை கீரிமலையில் நடக்கையிலே
உன்னெதிர் வந்த எதிரிப்படை தன்
குண்டால் உனை மாய்த்தானா
சுசின் என்று உன் தோழர் உனை அழைக்க
உன் கடமை முடிந்ததென்றா பாதியிலே
தாயகத்தின் மடியிலே தலையைச் சாய்த்தாயா
கண்ணா

நீ சிரிப்பான கதைகள் பலபேசி விளையாட
எப்போ எங்களிடம் ஓடோடி வருவாய் கண்ணா
ஆனாலும் உனை ஒரு கணப்பொழுதும்
நாம் மறவோம் கண்ணா

உன் பிரிவால் ஏங்கித் தவிக்கும்
பாசமிகுந்த அப்பா, அம்மா
ஆசை அண்ணா, அக்கா
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்

சிவகுமார் வீதி,
வட்டுக்கிழக்கு
மாவடி,
வட்டுக்கோட்டை.

(2288)

மிழக்காமல் 67 ஓட்டங்களைப் பெற்றார். செல்வன் நிசாந் இவருக்கு துணையாக நின்று 41 ஓட்டங்களைப் பெற்றார் யாழ். மத்திய கல்லூரியின் அணித்தலைவர் செல்வன் பிரபாகரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 195 ஓட்டங்களைப் பெற்றனது இதில் செல்வன் ரமீஸ் 33 ஓட்டங்களையும், செல்வன் அகாஸ் 31 ஓட்டங்களையும், செல்வன் மணிவதன் 25 ஓட்டங்களையும், செல்வன் விஜயகுமார் 28 ஓட்டங்களை மிகவும் சிறப்பாகவும் வேகமாகவும் பெற்றமை யாழ். மத்திய கல்லூரியின் திருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய செல்வன் எரிக் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

வகித்தனர். (42)

தக்க. (தி)

## பெயர்களைப் பதிவு செய்ய 30 இடங்களில் பணியகம்

(கொழும்பு)

வளைகுடா நெருக்கடியின் போது குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் தொழில் பாதிக்கப்பட்டு நாடுதிரும்பிய இலங்கையர்களின் பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்வதற்காக முப்பது இடங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் குவைத் ஆகிய நாடுகளில் இருந்து சுமார் ஒரு லட்சம் இலங்கையர் நாடு திரும்பிய போதும் அவர்களில் 84,000பேர் மட்டுமே நஷ்டஈடு பெறுவதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தங்களை பதிந்து கொண்டுள்ளதாகவும்.

பெயர்களை பதிந்து கொள்ளாதவர்களுக்காகவே இந்த நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும்.

இந்த நிலையங்கள் இன்று திங்கட்கிழமை முதல் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பயணச்சீட்டில் மோசடி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து வவுனியா நோக்கி வரும் ரயில் பயணிகள் தமது பயணச்சீட்டுகளைச் சரிபார்த்துக் கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர்.

மேற்படி புகையிரத நிலையத்தில் வவுனியா வரைக்கும் கட்டணம் பெற்றுக்கொண்டு விட்டு அநுராதபுரம் வரைக்கு மான பயணச்சீட்டுக்கள் வழங்கப்படுவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது இவ்வாறான மோசடிகளைத் தொடர்ந்தே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

## பேடன் பவல் நினைவு விழா

(புங்குடுதீவு)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் 6ஆம் யாழ் சாரணர் குழு நடாத்தும் பேடன் பவல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் திரு சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். பிரதமசிறப்புவிருந்தினர்களின் உரைகளுடன் அணிவகுப்பு உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறும். (22)

## தொழில் நுட்பக்கல்லூரிகளினது இறுதிப் பரீட்சை

### 1989, 1990, 1 91 க்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு

பின்வரும் பாடநெறிகளுக்குரிய பரீட்சை ஆரம்பமாகும் திகதியை பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| | பாடநெறி | ஆரம்பமாகும் திகதி |
|---|---|---|
| 01 | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (செய்முறைப் பரீட்சை) | 1992-03-30 |
| 02. | வணிகக்கற்கைகளிலான தேசிய டிப்ளோமா | 1992-03-30 |
| 03. | ஆங்கிலத்திலான மேற்பட்ட கல்வித் தேசிய சான்றிதழ் | 1992-03-30 |
| 04. | உயர் தேசிய வர்த்தக/கணக்கியல் டிப்ளோமா 2 ஆம் ஆண்டு | 1992-03-30 |
| 05. | தேசிய டிப்ளோமா ஆங்கிலம் | 1992-04-06 |
| 06 | தொழிற்தராதரப் பயிற்சி நெறிகள் (Trade courses) | 1992-04-22 |

மாணவர்கள் தங்கள் பரீட்சை ஆரம்பமாகும் தினத்துக்கு முதல் நாளில் (அலுவலக நாள்) தமது துறைத் தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டை சமர்ப்பித்து அப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டையையும் நேரசூசியையும் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்
தொழில் நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/4057)

1987 ஆம் ஆண்டு தவுடாப்பிட்டியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ரவி** (தேவராஜ் - அக்கரைப்பற்று, 07, அம்பாறை.)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது பயிற்சி முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** (தம்பையா விமலரஞ்சன் - குமுழமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு.)

**மகாலிங்கம்** (அலெக்சாண்டர் சிறில்-சுதந்திரபுரம், உடையார்கட்டு, முல்லைத்தீவு.)

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

★ **சிவா / அப்பன் / பொடி** (நடராசா கமலநாதன் - உரும்பராய்.)

முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு தமிழகம் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**பத்மநாபன்** (பி. பத்மநாபன் - திருச்சி, தமிழகம்.)

மட்டக்களப்பு, வத்தாறுமூலைப் பகுதியில் தேச விரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு மட்டுவிலில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளங்குடும்பத் தலைவர்.

1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**மேனன்** (வேலுச்சாமி ஜெகதீசன் - ஏழாம் வட்டாரம், குமுழமுனை, முல்லைத்தீவு)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கர்ணன்** (வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் - தம்பலகாமம், பளை.)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர் ஆவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4056)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

எழுந்து நில்; துணிவு கொள்; முழுப் பொறுப்பையும் உன் சொந்தத் தோள்களில் ஏற்றுக் கொள். உன் விதியைப் படைப்பவன் நீயே என்பதை உணர்.

— சுவாமி விவேகானந்தர்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 05


## தெரிவுக் குழுவும் அரசியல் தீர்வும்

"இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றைத் தெரிவுக்குழு தயாரிக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த முயற்சி வெற்றியளிக்காவிட்டால், இனி அரசியல் பிரச்சினை தீர்விற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்" இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை "இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காணவேண்டிய முழுப் பொறுப்பும் சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமே இப்பொழுது உள்ளது. இக்குழு சுமுகமான தீர்வு ஒன்றைக் காணும் என நான் நம்புகிறேன். இம் முக்கிய பணியில் இருந்து இக்குழு தவறினால், நாட்டில் பெரும் நெருக்கடி தோன்றுவதைத் தடுக்க இயலாது" என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

'தலைவர்களுடைய அறிக்கைகளை பார்க்கும் போது இனப்பிரச்சினையை வெகுஇலகுவில் தீர்த்து விடலாம் போலவும், அதற்கு திரு. மங்கள முனசிங்காவின் கையில் அதிகாரம் உள்ளது போன்றும் தெரிகிறது. ஆனால், இனப்பிரச்சினையின் தீர்வு அவ்வளவு இலகுவானதாக இருக்கும் என்று கூறிவிட முடியாது.

நாற்பது வருடங்களுக்கு மேலாக மாறி, மாறி வந்த சிங்களப் பேரினவாத அரசாங்கங்கள் உருவாக்கி விட்டுச் சென்ற சிக்கலான பிரச்சினைக்கு ஒரு சில மாதங்களுக்குள் தீர்த்து வைத்து விடலாம் என கனவு காண்பது மடமையாகும். அதிலும், அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் சிங்களக் கட்சிகளிடம் மனமாற்றம் எதுவும் ஏற்படாதவரை சாத்தியப்பாடு அற்றதாகும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது தமிழர்களினது அடிப்படைக் கோரிக்கையாகும். ஆனால், தமிழரின் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பது குறித்துப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குள் இழுபறி நிலவுகின்றது. வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைத்து அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைப்பது அனேகமாக சாத்தியப்பாடற்றதொன்றாகவே இருக்கும். இதே வேளை, நெருக்கடிகளையும் மீறி வடக்கு-கிழக்கு இணைப்புடன் கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் முன் வைக்க முடியும் நிலை உருவாகுமானால், அதனை பௌத்த சங்கங்களும், பேரினவாத அமைப்புகளும் வன்மையாக

# "இஸ்ரேலிய நிலப்பரப்பு எங்கும் குடியேறுமாறு விவிலிய நூல் எங்களுக்கு கூறுகிறது"

இக்குடியேற்றவாசிகள் உபசார குணங்கள் கொண்டவர்கள். மேற்குக்கரையிலும் (West Bank) காசாத் தொடரிலும் (Gaza strips) உள்ள தங்கள் யூதச் சகோதரர்களைப் போலல்லாது அராபியர்களைத் தங்கள் நண்பர்களாக்க விரும்புகிறார்கள் என இவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் இயந்திரத்துப்பாக்கிகளைத் தம்முடன் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்கின்றார்கள். இவர்கள் பலஸ்தீனிய அயலவர்களைக் காப்பி அருந்துவதற்குத் தங்கள் வீடுகளுக்கு அழைக்கின்றார்கள். உள்ளூர் அராபிய வியாபாரிகளையும் ஆதரிக்கின்றார்கள். இருந்தும் இவர்கள் தங்களுடைய சுகதுக்கங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.

பாதுகாப்புப் படைகளுடன் தொடர்பு கொள்வதற்காக ஜெருசலேத்தின் பழைய நகரமாகிய கெராட்சு வாசலை அண்மித்து அமைந்துள்ள திருமதி சாராபென் மோயல் உடைய வீட்டில் றேடியோத் தொடர்பு சாதனங்கள்(வாக்கி டோக்கிகள்) இணைக்கப்பட்டுள்ளது அயலிலுள்ள மற்றைய வீடுகளைப் போலல்லாது குடியேற்றவாசிகளின் வீடுகளின் பலகணிகள் மறிப்புக் கொண்டதாயும், வெளிப்படலைகளின் மேற்பக்கம் முட்கம்பி கொண்டதாயும் இருக்கின்றன. திருமதி சாராவின் பிள்ளைகள் வெளியில் செல்லும் போதெல்லாம் அவர்களுடைய பாதுகாப்புக் கருதி அரசாங்க ஊதியம் பெறும் ஆயுதந் தரித்த பாதுகாவலர் ஒருவர் அவர்களுடன் செல்வார். அப்பிள்ளைகள் உள்ளூர் அராபியக் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதில்லை. இது சிக்கல் நிறைந்ததாயுள்ளது. ஆனால் 'இஸ்ரேலின் நிலப்பரப்பின் எல்லாவிடத்திலும் யூதர்கள் வசிக்கத் தக்கதாக இருக்க வேண்டும். அராபியர்கள் இதை விளங்கிக் கொண்டு எம்மை ஏற்றுக் கொள்வார்கள்' என 37 வயதான பென்மோயல் என்னும் யூதப் பெண்மணி கூறுகின்றார்.

யூதக்குடியேற்றத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டுள்ள ஒரு அரசாங்கத்தின் ஆதரவுடன் பழைய நகரத்திலுள்ள முஸ்லிம்களின் பகுதியில், பாலஸ்தீனியர்களுக்கு கோபமூட்டக்கூடிய வகையில் இஸ்ரேலிய அதிதீவிரவாதிகள் ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கி வருகிறார்கள். தற்பொழுது யூதர்கள்வாழும்பகுதிக்குவெளியே 600இற்கு மேற்பட்ட யூதக் குடியேற்ற வாசிகளின் குடும்பங்கள் வசித்து வருகின்றன. 'டமாஸ்கவாசலுக்கு' அருகாமையில்அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத்திட்டம் முடிவுற்றதும் அவர்களின்எண்ணிக்கை இருமடங்காகி விடும். இஸ்லாமியர்களுடைய மூன்றாவது அதி புனிதத்தன்மை வாய்ந்த வணக்கஸ்தலமான அல் அக்சா மசூதிக்கும் மேற்கத்தைய சுவருக்கும் (Western-Wall) அண்மையாகவுள்ள இடங்களையே பல யூதர்கள் தாங்கள் வசிப்பதற்குத் தெரிவு செய்கின்றார்கள். யூதர்களின் தெய்வமான ஹெரொட்சு கோயிலை (Herod's Temple) இது முன்னர் இருந்த இடத்தில் இஸ்ரேல் மீண்டும் அமைக்கும் ஒரு நாளைச் சிலர் எதிர்நோக்குகின்றார்கள். "அவர்கள் நியாயமானவர்களாகவிருந்தால் ஏன் காவல்துறை பாதுகாப்புடன் வருகின்றார்கள்" எனக்கேட்கின்றார் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் இருக்கும் பலஸ்தீனப் பத்திரிகையாளர் மஜீட் அல்பட்சு அவர்கள்

1967ல் ஜெருசலேத்தை இஸ்ரேல் கைப்பற்றுவதற்கு முன்பே மிதமிஞ்சிய சனநெருக்கடியில் இருந்து தப்புவதற்காக மத்திய வகுப்பைச் சேர்ந்த அராபியர்கள் தாங்கள் வசித்து வந்த முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலிருந்து வெளியேறத் தொடங்கிவிட்டனர் அதைத் தொடர்ந்து இஸ்ரேல் கடைப்பிடித்து வந்த கொள்கை இவ்விடயங்களைக் கைப்பற்றுவதற்கு இலகுவாயமைந்தது என அராபியர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். வீடுகளைப் பெரிதாகக் கட்டுவதற்கோ அல்லது பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்கோ நீண்டகாலமாக ஒப்புதல் தர அரசாங்கம் மறுத்துவருகின்றது எனவும் அவர்கள் குறைகூறுகின்றார்கள். இதன்காரணமாக அப்பகுதி சீரழிந்துவிட்டதெனவும் அவர்கள் கூறுகின்றார்கள். அராபியர்கள் வாழ்ந்து வந்த பழைய நகரத்தில், புதிய நகரமொன்றை அமைப்பதற்காக ஒரு அமைதியான இயக்கம் ஆரம்பித்த போது1978ல் இருந்த லிகுட்(Likud)அரசாங்கம் அதற்கு ஆதரவளித்தது. ஒரு காலத்தில் யூதர்களின் உடைமையாகஇருந்தன என்று காரணம் காட்டப்பட்டு சிலகட்டடங்கள் பொறுப்பேற்கப்பட்டு, அங்கு இரண்டு யெசிவாஸ்கள் என்னும் வணக்கஸ்தலங்களும் திறக்கப்பட்டுள்ளது தற்பொழுது வீட்டுவசதியமைச்சராகவிருக்கும் ஏரியல் சரோன் ஒருவசிப்பிடத்தை இங்குவாங்கியுள்ளார். இவ்வசிப்பிடத்திற்கு எப்போதாவது அவர் வருகைதருகின்றார். ஆனால் இதற்கு எந்நேரமும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

பழைய நகரில் எஞ்சியிருந்த அராபியர்களும் கூடுதலாக அகற்றப்பட்டுள்ளனர். நகரின் மேற்குப்பக்கமாக ஜவ்வாவாசலுக்கு (Jaffa Gate) வெளியே, யூதர்களுக்கென ஒரு பெரிய புதிய வீடமைப்புத் திட்டத்தையும், ஒருவர்த்தகத் தொடர்மாடிக் கட்டடத்தையும் அமைப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் 90 000க்கு கூடுதலான குடியேற்றவாசிகளுக்கு வீடுகளை அமைக்கவேண்டுமென்ற திரு சாரோன்அவர்களுடைய துரித செயல்பாட்டை இது முழுமைப்படுத்துகின்றது சென்ற ஆண்டுகடைசியில் பழைய நகரின் சுவர்களின் வெளிப்புறத்தில் உள்ள சில்வானில் அமைந்துள்ள ஆறு வீடுகளைக் குடியேற்றவாசிகள் கைப்பற்றினார்கள். அவர்கள் அவ்வீடுகளில் இருந்த குடும்பங்களைத் துப்பாக்கி முனையில் கட்டாயமாக வெளியேற்றினார்கள். அதே குடியேற்றவாசிகள் அந்தக் கிராமத்தில் யூதர்களுக்கென 200 வீடுகளை அமைக்கும் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளாகி இருக்கும் முஸ்லிம்களிடம் பணம் தரப்பட்டு அவர்கள் சொத்துக்கள் வாங்கப்படுகின்றன.

பணம் மூலம் வாங்க இயலாத போது பழைய சட்டங்கள் மூலம் வீடுகள் எடுக்கப்படுகின்றன. உதாரணமாக அவ்விடத்தில் வசியாத ஒரு பலஸ்தீனியருடைய சொத்தைக் கைபபற்றுவதற்கு 1950-ம் ஆண்டு ஆக்கப்பட்ட சட்டமொன்று இஸ்ரேலுக்கு ஒப்புதல் கொடுக்கிறது. நுணுக்கமாக நோக்கினால், 1948-ல் இருந்து 1967 வரை பழைய நகரைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த ஜோர்தான் உட்பட, மற்றைய அரேபிய நாடுகளில் வசிக்கும் எந்தவொரு பலஸ்தீனியனும் இச்சட்டத்தின் கீழ் அடங்குவார். திரு. சாமோனுடைய வீடமைப்பு அமைச்சிலிருந்து குறிப்பிடத்தக்க சட்ட, பொருளாதார உதவிகளையும் பண உதவியையும் குடியேற்றவாசிகள் பெறுகின்றார்கள் சட்டத்தைத் தங்களுக்கேற்ற மாதிரி மாற்றுகிறார்கள் என்றும், சட்டத்தை ஏமாற்றுகிறார்கள் என்றும், சட்டத்தை மீறுகிறார்கள் என்றும் அரச அதிகாரிகளுக்குத்தெரியும் எனக் கூறுகின்றார் இஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டெடிசக்கர் அவர்கள். ஆனால் குடியேற்ற வாசிகளுக்காகப் பேசுகின்ற பெண்ணான ரெகிலா றாப்ஸ் "இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை" எனக்கூறுகின்றார் "நாங்கள் அராபியர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதில்லை. பழுதான நிலையிலுள்ள வீடுகளுக்குக் கூடுதலான பணம் கொடுகின்றோம்" என அவர் மேலும் கூறுகின்றார். எப்படியிருந்தாலும் நாம் எமக்கும் மேலாக உள்ள ஒருவருக்கு மறுமொழி கூறவேண்டியுள்ளது. எனக் குடியேற்றவாசிகள் கூறுகின்றார்கள் "இஸ்ரேலுக்குரிய நிலப்பரப்பில் எங்கணும் குடியேறும்படி விவிலிய நூலில் எங்களுக்குக் கூறப்படுகின்றது. அதுவும் பழைய நகரத்திலேயே முக்கியமாகக் குடியேறும்படி சொல்லப்பட்டிருக்கின்றது" என றபி ஸ்லோமோ அவினர் கூறுகின்றார்.

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வன்முறைகளுக்கு வழி வகுக்கும் என்றும், பலஸ்தீனிய மக்களிடையே கிளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் என்றும் இஸ்ரேல் அதிகாரிகளுக்கு தெரியும் சென்ற வாரம் மொஸ்கோவில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்ட மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தைகளை இது மறுபுறத்தில் குந்தகமாக்கக்கூடும். ஆனால் எப்படியிருந்தாலும் சமாதான முறைபற்றி அரசாங்கம் அக்கறையாக இல்லை அத்துடன் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் குழப்பங்கள் ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்கு அரசு ஆயத்தமாக உள்ளது. மகத்துவமுடையவரான சுலைமான் (Suleiman the Magnificient) அவர்களால் கட்டப்பட்ட சுவர்களுக்கு உட்பக்கம் காவலர்களும் படைப்பிரிவினர்களும நிரம்பியுள்ளனர் அத்துடன் சின்பெற் (Shin Bet) றினுடைய இஸ்ரேலிய பாதுகாபபுத்துறையினரால் இப்பகுதி பலமாகப் பாதுகாக்கப்படுகின்றது. தங்களைக்காண வருபவர்கள் கூட அடிக்கடி சோதனை செய்யப்படுகின்றார்கள் என அராபியர்கள் கூறுகின்றார்கள். அதே வேளையில் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் பலயூதர்கள் கத்தியினால் குத்தப்பட்டுள்ளனர் இப்பகுதியில் கலவரம் வெடித்தால் அதன் அதிர்வு ஆயிரம் மைல்களுக்கு எதிரொலிக்கும்.

நன்றி டைம்ஸ்

## "அயல்நாட்டை ஆக்கிரமிக்க

## நேதாஜிக்கு வழங்கப்பட்ட

வேளை, நெருக்கடிகளையும் மற்ற வடக்கு - கிழக்கு இணைப்புடன் கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் முன் வைக்க முடியும் நிலை உருவாகுமானால், அதனை பௌத்த சங்கங்களும், பேரினவாத அமைப்புகளும் வன்மையாக எதிர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. அவற்றை எதிர்த்து அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுகளை ஒருபோதும் செயற்படுத்தப் போவதில்லை. இந்நிலையில், பிரதான அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானத்திற்கும், தமது கட்சிகளின் கொள்கைக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் எதுவித தீர்வு திட்டங்களையும் தமது கட்சிகள் வைக்கவில்லை எனவும் தப்பித்துக்கொள்ளக் கூடும்.

இதேவேளை வடக்கு, கிழக்கு, இணைப்பு இல்லாத எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமானால், தமிழரின் நியாய பூர்வமான உரிமைகள் வழங்கப்படவேண்டும், அதற்கேற்ப பாராளுமன்றத் தேர்வுக்குழு தீர்மானத்தை வைத்தாக வேண்டும். ஆனால், இது சாத்தியப்படக்கூடியது என்பது சந்தேகமே.

இந் நிலையில். பாராளுமன்றத் தெரிவுக்குழு ஓர் ஏற்புடைய தீர்வுத்திட்டத்தை முன் வைக்க வேண்டும் என அனுரா பண்டாரநாயக்கா கூறியிருப்பது யார் ஏற்கக் கூடிய திட்டத்தை என்பது கேள்விக்குரியதாகும். சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு ஏற்புடைய திட்டமா? அல்லது தமிழர்தரப்பினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டமா? அல்லது இருவருக்கும் ஏற்புடைய திட்டமா?

இதில் இருவருக்கும் ஏற்புடைய தீர்வுத் திட்டமே சமாதானத்திற்கு வழிவகுக்கும். இந்நிலையில். தமிழரே தமது உரிமை கோரிப் போராட்டம் நடத்துவதினால். தமிழரின் கோரிக்கைகளை நிறைவு செய்யக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றே அவசியமானதாகும். இவ்வாறான தீர்வுத் திட்டம் ஒன்றினால் சிங்களவர் ஒன்றும் இழந்து விடப்போவதில்லை. தமிழர் தமது உரிமையைக் கேட்கின்றார்களே ஒழிய சிங்களவர் உரிமையை கேட்கவும் இல்லை; பறிக்கவும் இல்லை.

இதேவேளை திரு. அனுரா பண்டார நாயக்காவும் திரு. அஷ்ரப்பும் குறிப்பிட்டது போல் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வுகாண இது ஓர் இறுதிச் சந்தர்ப்பமாகவே இருக்கும் என்றே சொல்லலாம். ஆனால் திரு, அஷ்ரப் குறிப்பிட்டது போல் இனப் பிரச்சினை தீர்விற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்வு காணாவிடில் அதற்கு தனியாக மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழு காரணமல்ல. கடந்த காலத்தில் மக்களுக்கு இனவாதத்தை ஊட்டி வளர்த்த சிங்களப் பேரிவாதக் கட்சிகளே காரணமாகும்.

# “அயல்நாட்டை ஆக்கிரமிக்க இந்தியா விருப்பவில்லை”

**- ஆர். வெங்கட்ராமன்**

(டில்லி)

''அயல் நாட்டு மண்ணில் ஒரு அங்குலம் கூட இந்தியாவிற்குத் தேவையில்லை ஆசியாவிலோ, தெற்காசியாவிலோ தலைமைப் பீடத்தை அடையவும் இந்தியா விரும்பவில்லை.'' என்று இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற இந்திரா காந்தி நினைவுச்சொற்பொழிவில் 'இந்திரா காந்தியின் கீழ் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை' என்ற தலைப்பில் ஆர். வெங்கட்ராமன் உரையாற்றினார் அந்த வேளையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் சிம்லா ஒப்பந்தத்தை மீறி காஷ்மீரில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு தருவதை இந்தியா கண்டிக்கிறது இவ்வாறு பாகிஸ்தான் நடந்து கொள்வதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். அது யாருக்குமே நல்லதல்ல பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் அலிபூட்டோவே சிம்லா ஒப்பந்தத்தை மதிக்காமல் இருந்தார். அதற்குப் பின்னர் வந்தவர்களும் இந்த ஒப்பந்தத்தை மதிக்கவில்லை,

1971 ஆம் ஆண்டு இந்தியப் படைகள் வெற்றி பெற்றதன் பின்பு பூட்டோவுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் இந்திரா காந்திக்கு இருந்ததில்லை. ஆனால் சிம்லா ஒப்பந்தத்தை செய்ய இந்திரா காந்தி முன் வந்ததாலேயே பாகிஸ்தான் அவமானத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. இந்தியாவிற்கு தனது மண்ணே போதும் அது அயல் நாடுகளைக் கைப்பற்ற விரும்பாது இவ்வாறு வெங்கட்ராமன் தனது உரையில் குறிப்பிட்டார்

# கொமன்வெல்த் நாடுகள் துண்டுபட்டு அழிந்து விடும்

**— கொர்பசேவ்**

[மாட்ரிட்]

சுதந்திர குடியரசுகளை கொண்ட புதிய கொமன்வெல்த் அமைப்பு துண்டுபட்டு தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் என முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் கூறியுள்ளார்.

ஹொல்பாஎன்றபிரபல சஞ்சிகைகக்கு அளித்த பேட்டியில் இவ்வாறுஅவர் குறிப்பிட்டார்.

கொமன் வெல்த் தேசிய குழுக்களாக உடைந்து வருவதை என்னால் பார்க்க முடிகிறது ஆனால் தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் என்பதை இக் குழுக்கள் உணரவில்லை என்றும் கொர்பசேவ் தெரிவித்தார்.

ரஷ்யத்தலைவர்யெல்சினின் சீர்திருத்தங்களை புகழ்ந்த அவர், யெல்சின் தனது முயற்சியில் வெற்றிபெற வேண்டும் என்றும் வாழ்த்தினார்.

கொர்பசேவின் தற்போதைய வாழ்க்கை நடைமுறைகள் பற்றியும் 'ஹொல்பா' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

மொஸ்கோவில்மூன்றுஅறைகளைக் கொண்ட தனது வீட்டில் கொர்பசேவ் வாழ்கிறார். ஜனாதிபதி பதவியைக் கைவிட்ட பின்னரும் கொர்பசேவின் தினசரி அலுவல்களில் அதிகமாற்றம் இல்லை. ஒருவிஷயம் மட்டும் மாறிஇருக்கிறது. காலை எட்டு மணிக்குப் பதில் நடுப்பகலிலேயே வேலையை ஆரம்பிக்கின்றார். அவரதுவீடு புத்தகங்களால் நிறைந்திருக்கிறது. இருபதினயிரம்புத்தகங்களும், தஸ்தவேஜுகளும் அங்கு உள்ளன.

'என்னை உலகம் மறந்துவிட்டதாக நான் நினைக்கவில்லை. சர்வதேச சமூக, அரசியல் ஆராய்ச்சி நிதியத்தை நிறுவுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன்'' என்றும் கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

# கொள்கையில் மாற்றமில்லை

(பீக்கிங்)

சீனாவின் மறுசீரமைப்பு கொள்கைகளை நூறு ஆண்டுகளுக்கு மாற்றுவதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஆளும் நிறைவேற்று அதிகாரிகள குழு இந்த முடிவினை எடுத்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

# குண்டுவெடிப்பு தீவிரம்

(வாஷிங்டன்)

1989 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தீவிரமாக அதிகரித்து வருவதாக அமெரிக்காவின் மதுபானம், புகையிலை, வெடிபொருளுக்கான பிரிவு அறிவித்துள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் 1989 இலிருந்து 1991 வரை 47 சதவீதத்திலிருந்து 2.490ஆல் உயர்ந்தது என்றும் 1990முதல் இருபது சதவீதத்தால் உயர்ந்ததாகவும் மேற்படி பிரிவு தெரிவித்தது.

## நேதாஜிக்கு வழங்கப்பட்ட

# ‘பாரத ரத்னா’ விருதினை மகள் ஏற்க மறுப்பு

[டில்லி]

இந்தியாவின் முக்கிய சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவராக மதிக்கப்படும் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸிற்கு வழங்கப்பட்ட 'பாரத ரத்னா' விருதைப் பெற்றுக் கொள்ளஅவரதுமகள்டாக்டர் அனிதாபோஸ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜியின் பங்களிப்பையும், அவரது செயற்பாடுகளையும் அங்கீகரிகக நாற்பது ஆண்டுகள்சென்றது ஏன் என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும்,

நானோ எனது தாயாரோ இந்த விருதைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லைஎன்று இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்து விட்டதாகவும்,

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் போஸ் குடும்பத்தைச் சேர்ந்த வேறு எவரும் இவ்விருதினைப் பெற முடியாது என்றும் டாக்டர்அனிதா தெரிவித்துளளார்.

## நெருக்கமான போட்டியாக

# பிரி. தேர்தல்கள் அமையும், அரசியல் விமரிசகர் கருத்து

(லண்டன்)

பிரித்தானியாவில் ஏப்ரல் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தல் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் மிகவும் நெருக்கமான போட்டிகளில் ஒன்றாக இருக்கும் என அரசியல் விமரிசகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அபிபபிராய வாக்கெடுப்பின்படி ஆளும் கட்சி தொழிற் கட்சியை விட சிறிது பின் தங்கிய நிலையிலுள்ளது. ஆனால் நான்காவது முறையாகவும் கன்சர் வேடிவ் கட்சி வெற்றிவாகை சூடும் என பிரித்தானிய பிரதமர் ஜோன்மேயர் கூறியுள்ளார்.

தொழிற்கட்சியும், லிபரல் ஜனநாயகக்கட்சியும் தேர்தல் அறிவிப்பை வரவேற்றிருக்கின்றன.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் 651, இடங்கள் உள்ளன. தற்போதுள்ள எம் பிக்களில் முன்னாள் பிரதமர் மாகிரட்தட்சர் உட்பட எண்பத்திமூன்று பேர் மீண்டும் தேர்தலில் நிற்கப்போவதில்லை என அறிவித்திருக்கின்றார்கள்.

# குவைத்துக்குஏவுகணைகள்; காங்கிரசிடம் அனுமதி

(வாஷிங்டன்)

இருநூற்றி ஐம்பது கோடி டொலர் பெறுமதிவய்ந்த பெற்றியாட்ஹோக் ஏவுகணைகளைகுவைத்துக்கு விற்பனை செய்யபுஷ்நிர்வாகம் அமெரிக்க காங்கிரசின் அனுமதியைக் கோரியுள்ளது.

முப்பது நாட்களுக்கிடையில் அமெரிக்க காங்கிரஸ் தனது பதிலை அறிவிக்க வேண்டுமென்பது நியதி. அத்துடன் புஷ் நிர்வாகத்தின் வேண்டுகோளும் கூட.

ஈழநாதம்

# மறுமலர்ச்சிக் கழகத்தின் 12வது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சிக் கழகம் இன்று தனது பன்னிரண்டாவது ஆண்டை நிறைவு செய்கிறது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் மறுமலர்ச்சிக் கழகம் அரச இயந்திரத்திற்கும், தேசிய போராட்டத்தின் எதிர் சக்திகளுக்கும் எதிராக தனது பன்னிரண்டு ஆண்டுப் பயணத்தை நிறைவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர்ந்தது டன் பல கருத்தரங்குகளையும் மறுமலர்ச்சிக் கழகம் நடத்தியுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் பணியிலும் வறிய மக்களுக்கும் அடிப்படை உதவிகளை நல்கும்பணியிலும் ஈடுபட்டுள்ளமை தெரிந்ததே.

## துப்பாக்கிச் சூடு

மண்டைதீவு பகுதியில்நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர்குருநகர்பகுதியை நோக்கி தொடர்ச்சியான 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். கல்முனை, பூநகரி பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அரியாலை கிழக்கு பகுதியை நோக்கி தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

## விளையாட்டு அபிவிரு. குழு இன்று மூன்று போட்டிகள்

யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வலி கிழக்குப் பிரிவிற்கான போட்டியில் நாவாந்துறை சென் நிக்கலஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோத உள்ளது இந்தப் போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

இன்றைய வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வலி கிழக்குப் பிரிவில் ஊரெழு இளைஞர் அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் அணியும், குருநகர் சென் றோக் அணியை எதிர்த்து தொழில்நுட்பக்கல்லூரி அணியும் விளையாடும். இப்போட்டிகள் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் பி.ப. 3 00மணிக்கு ஆரம்பமாகும்.

## சந்திப்புக்கென இடங்கள் சமூக விஞ்ஞானிகள் சிபார்சு

(கொழும்பு)

கொழும்பு காதல் சோடிகள் சந்திக்கவென விசேட இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என சமூக விஞ்ஞானிகள் சிலர் தெரிவித்துள்ளனர். பெரும்பாலான நாடுகளில் இத்தகை இடங்கள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்,

பொது இடங்களில் காதல் சோடிகள்கூடுவதுபெரும் சமூக பிரச்சினையாக இருந்து வருகிறது பூங்காக்கள், கடற்கரை' மிருகக் காட்சிச்சாலை ஆகியவற்றில் இவர்களின் சந்திப்பு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பல இடங்களில் இவர்களின் நடத்தைஒழுக்கவரம்புகளுக்கு அப்பால் சென்று விடுவதாக முதியவர்கள் பலர் முறைப்பாடு செய்துள்ளனர். பெரும்பான்மையான மக்கள் இவர்களின் நடத்தையை ஏற்றுக் கொள்வதில்லை.

இந்தப் பிரச்சினை மனித உணர்ச்சிகளிலுள்ள ஏற்றத் தாழ்வின் விளைவாக ஏற்படுகிறதென சமூகவியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். எனவே இவர்களுக்கு விசேட இடங்களை ஒதுக்க வேண்டுமென சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்எனதெரிவிக்கப்படுகிறது

## பஞ்சாப்பில் துப்பாக்கிச் சூடு 18 பொதுமக்கள் பலி

பஞ்சாப்பில் லூதியான மாவட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பதினெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும், ஆறுபேர் காயமடைந்துள்ளனர் என்றும் பஞ்சாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இரு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் போதே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும், ஸ்கூட்டரில் சென்ற தீவிரவாதிகளே இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.


ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணிக்கும்

காண்பிக்கப்படுகின்றது

FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)

(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]


## அரசியல்

முடியாதது ஆகிவிடும்'' இவ்வாறு புலிகள் கிறீஸ்தவத் தூதுக்குழுவிடம் எடுத்துக் கூறினர்.

''விடுதலைப் புலிகள் ஒருபுறம் மண் மீட்பு போராட்டத்தை நடத்திக் கொண்டு,

# பாதயாத்திரை ஈழப்பொறியாம் சிங்கள அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

அரசுக்கெதிரான பாதயாத்திரையை நடத்தும் எதிர்க் கட்சிகளோடு ஈழம் கோரும் கட்சிகளும் ஒத்துழைக்கின்றன இந்த பாதயாத்திரை ஒரு ஈழப்பொறி என்று பல சிங்கள அமைப்புக்கள் கண்டனம் செய்து உள்ளன. துட்டகைமுனு ஐக்கிய இளைஞர் முன்னணி, அகில இலங்கை ரக்சத் சாசன சங்கம், சிறிலங்கா எக்சத் பல மண்டலய, சிறீமத் அநாகரீக ஞாபகார்த்த சங்கம், எர்சத் பௌத்த பல மண்டலய, கல்திமா அரக்ச வியாபாரய என்பன கைச்சாத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் பாதுகாப்பு படையினர் இப்போது வடக்கு, கிழக்குப்பகுதியில் பெற்றுள்ள வெற்றியை பலவீனப்படுத்தும் நோக்குடன் ஈழம் வாதிகளுடன் இணைந்து படையினரின் நடவடிக்கைகளை பாதிக்கச் செய்யும் வகையில் பாதயாத்திரையை ஒழுங்கு செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது

மேலும்தென்பகுதியில்குழப்பத்தை ஏற்படுத்தி வடக்கு கிழக்கு, பகுதியிலிருந்து படையினரை வாபஸ் பெறச்செய்வதே இப்பாதயாத்திரையை ஏற்பாடு செய்தவர்களின் தந்திரம் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு யுத்த நிறுத்தத்திற்கான நிலையை ஏற்படுத்துவது இவர்களின் நோக்கம் ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பாதயாத்திரைச் செய்திகள் பத்திரிகைகள் இருட்டடிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை பற்றிய செய்திகளுக்கு கொழும்பு பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்துள்ளன ஆனால் இப் பாதயாத்திரைக்கு எதிராக கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன

இன்று விகாரமாதேவி பூங்காவிலிருந்து கதிர்காமம் நோக்கி எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்படவுள்ள பாதயாத்திரை பற்றிய செய்திகளையே இவை இருட்டடிப்புச் செய்துள்ளன. ஆனால் இப் பாதயாத்திரையை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவற்றின் செய்திகளுக்கு லேக்கவுஸ் பத்திரிகை முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

## தென் ஆபிரிக்க அணி அரையிறுதிக்கு தெரிவு

உலகக் கிண்ணகிரிக்கட் போட்டித் தொடரில் தென்னாபிரிக்க அரை இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது ஏற்கனவே அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியை இழந்து விட்ட இந்திய அணியுடன் நேற்று அடலயிட்டில் விளையாடிய தென் ஆபிரிக்க அணி ஆறு விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது.

மழையின் காரணமாக ஆட்டம் முப்பது ஓவர்களுக்கு குறைக்கப்பட்டிருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆறு விக்கெட் இழப்பிற்கு நூற்றி எண்பது ஓட்டங்களைப் பெற்றது பின்னர் விளையாடிய தென் ஆபிரிக்க அணி 29 1 ஓவர்களில் நூற்றி எண்பத்தொரு ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது

இதேவேளை பாகிஸ்தானுடன் விளையாடிய சிறிலங்கா அணி தோல்வியுற்றது இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது.

வெலிங்டனில் நடந்த மற்றுமொரு போட்டியில் நியூசிலாந்து அணி இங்கிலாந்து அணியை ஏழு விக்கட்டுகளால் தோற்கடித்துள்ளது.

## பாடசாலைகளை பகிஸ்கரிக்க தொண். ஆசிரியர் கோரிக்கை

வடபகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமையைக் கண்டித்து சகல யாழ் மாவட்ட பாடசாலைகளையும் நாளை மூடிப் பகிஸ்கரித்துத் தமது போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் யாழ் மாவட்டம் உட்பட வடமாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாது அரசு இழுத்தடிப்புச் செய்வது தெரிந்ததே. இது தொடர்பாக நேற்றுக் காலை யாழ்மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலைகளைப் பகிஸ்கரிக்குமாறு சகல நிரந்தர, பயிலுனர், கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களையும் மாணவர்களையும் கோருவதெனவும் அதன் பின்னர் அடுத்துவரும் ஓர் தினத்தில் யாழ். கல்வித் திணைக்கள அலுவலகத்தை அடையாளமாக ஒரு நாள் மூடுதல். இந் நடவடிக்கைகள் பலனளிக்காத பட்சத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை யாழ் கல்வித் திணைக்கள அலுவலகத்தை தொடர்ச்சியாக மூடுவதெனவும் தீர்மானித்துள்ளது.

## வர்மா கமிஷன்

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் பந்தோபஸ்து குறைபாடு தொடர்பாக ஆராய்ந்து வர்மா கமிஷன் முன்னிலையில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணிநேற்றுபுதுடில்லியில் நிறைவடைந்தது.

கமிஷனின்அறிக்கைவிரைவில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூர்

ருப்பதை உணரத்தொடங்கியுள்ளான்.

பொதுவாக சிறிலங்காவின் உற்பத்திப் பொருள்களின் 1/3 பகுதி வட தமிழீழத்திலேயே சந்தைப்படுத்தப்பட்டு வந்தது. இவை எதிரியால் நிறுத்தப்பட்டதால், இன்று சிறிலங்காவின் 1/3 பகுதி உற்பத்திகள் தேங்கியுள்ளன. 1/3 பகுதி தொழிலாளர்களின் வேலை முடக்கப்பட்டுள்ளது. 1/3பகுதி இலாபம், வரிப்பணம் என்பன அவனுக்குக் கிடைக்காமல் போயிற்று

அதேவேளை எமது மக்கள் இவற்றிற்கான மாற்றுப் பொருள்களை இங்கேயே உற்

## இலங்கை திரும்பிய அகதிகள் குறித்து பேச்சு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய 7500 தமிழ் அகதிகள் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம் ஜா சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுடன் கலந்துரையாடினார் என பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

'சண்டே ரைம்ஸ், வாரபத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மன்றி ஏனைய விடயங்கள் குறித்துப் பேசியதாகவும் தெரிவித்தார்.

இதே நேரம் என் எம்.ஜா கடந்த வாரம் சிறிலங்கா வெளிநாட்டமைச்சிடம் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவே. பிரபாகரன் பற்றிய மேலதிக தகவல் கோரி கடிதம் ஒன்றைக் கையளித்ததாகவும் பிரட்மன் வீரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின்

தளபதி திரு. கங்கைஅமரனும் மங்களவிளக்கேற்றினர். தொடர்ந்து போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் திரு தமிழ்அன்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த இசை நாடாவின் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிச் செயலாளர் திரு யோகி, யாழ். மாவட்ட மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி ஆர்த்தி, மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பிரதிப் பொறுப்பாளர்

முதியவர்கள் பலர் முறைப் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00, 6.00 மணிக்கும்

காண்பிக்கப்படுகின்றது

## FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)

(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

(சி/4011)

உ

சிவமயம்

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவப் பொங்கல் -- 1992

மேற்படி ஆலய ஆண்டுற்சவப் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18-03-1992 புதன் கிழமை பகல் முழுவதும் இரவும் 19-03-1992 வியாழன் அதிகாலை வரை நடைபெறும்.

இவ்வருடம் பொங்கல் கடந்த வருடத்தைப் போலன்றி வழமையாக நடத்தி முடிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

முக்கியகுறிப்புக்கள்:

★ போக்கு வரத்து வசதியின்மையால் வழமை போல் சாவகச்சேரியிலிருந்து பண்டம் கொண்டு வர முடியாதுள்ளமையால் பண்டம் எடுக்கும் வைபவம் கோயிலடியிலேயே இடம் பெறும்.

★ போக்குவரத்து வசதிகளை தனியார் வாகனங் களும் மினிபஸ் பகுதியினரும் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

★ ஆலய வீதியில் வியாபாரம் செய்ய விரும்பு பவர்கள் 1992-03-16 திங்கள் நள்ளிரவிற்கு முன் கடைக்குரிய முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெறுமாறும் அதன் பின் எவரின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட் டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| சொக்கலிங்கம் அமிர்தலிங்கம் (தலைவர்) | நா. வீரகத்திப்பிள்ளை (ஐங்கரன்) |
| மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) கிளிநொச்சி | பொருளாளர் (பிரதம பூசகர்) |
| வ. வனேஸ்வரன் (உப தலைவர்) | சி. சு. சின்னத்தம்பி (இணைக்காரியதரிசி) |

(புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய திருப்பணிச் சபை)

(சி/4058)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

றும், ஆறுபேர் காயமடைந் தள்ளனர் என்றும் பஞ்சாப் பொலிசார் தெரிவித்துள்ள னர்.

இரு இடங்களில் இடம் பெற்ற சம்பவங்களின் போதே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட் டதாகவும், ஸ்கூட்டரில் சென்ற தீவிரவாதிகளே இத் தாக்குதலை மேற்கொண்ட தாகவும் பொலிசார் தெரிவித் துள்ளனர்.

### அரசியல்

முடியாதது ஆகிவிடும்'' இவ் வறு புலிகள் கிறிஸ்தவத் தூதுக்குழுவிடம் எடுத்துக் கூறினர்.

''விடுதலைப் புலிகள் ஒரு புறம் மண் மீட்பு போராட் டத்தை நடத்திக் கொண்டு, மறுபுறம் தமது கட்டுப்பாட் டிலுள்ள பிரதேசங்களில் சிவில் நிர்வாக ஆட்சியமைப் பிற்கான நிறுவனங்களையும் உருவாக்கி வருகின்றனர். இந்த ஆட்சியமைப்பு நிறுவ னங்கள் படிப்படியாக விரிவா க்கப்பட்டு ஒரு தனியரசுக் கான அத்திவாரமாக அமை யும்'' என்றும் புலிகள் தரப் பில் தெரிவிக்கப்பட்டது.

''தமிழீழ தனியரசை உரு வாக்குவதே விடுதலைப் புலி களின் அரசியல் குறிக்கோள் என்பதை உலகம் அறியும். ஆயினும் அதேவேளை தமிழ் மக்களுக்கு பூரண தன்னாட்சி வழங்கும் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு முன்வைக்குமே யானால் அதனை பரிசீலனை செய்ய நாம் தயாராக இருக் கிறோம், எனவே நாம் ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப் பிக்கவேண்டியதேவை இல்லை அரசுதான் ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன் வைக்க வேண்டும்'' எனவும் புலிகளால் தெரிவிக்கப்பட் டது.

இதே நேரம் கிறிஸ்தவ நல்லெண்ண தூதுக் குழுவினர் பேச்சுவார்த்தை ஆரம்பிப் பதற்கு முன்னோடியாகப் போர் நிறுத்தம் ஒன்று அறி விப்பது குறித்தும் அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில் அப் போர் நிறுத்தத்தைக் கண் காணிக்க வெளிநாட்டு சமா தானப் படைகளை அழைப் பது குறித்தும் விடுதலைப்புலி களின் நிலைப்பாடு என்ன வாகவுள்ளது எனவும் கோரி னர்.

இது குறித்து பதிலளித்த விடுதலைப் புலிகள் தரப்பினர் அரசாங்கம் போர் நிறுத்தம் ஒன்றை அறிவிப்பின் புலிகள் அதனைக் கடைப்பிடிப்பர் எனத் தெரிவித்தனர். ஆனால் வெளிநாட்டுப்படை ஒன்றி னால் தமிழ் மக்கள் பட்ட அவலம் தமக்கு நன்கு தெரி யும் எனவும் அதனால் அது குறித்து ஆழமான பரிசீலனை செய்த பின்னரே முடிவு

இழப்பிற்கு நூற்றி என்பது

### உள்ளூர்

ருப்பதை உணரத்தொடங்கி யுள்ளான்.

பொதுவாக சிறிலங்காவின் உற்பத்திப் பொருள்களின் 1/3 பகுதி வட தமிழீழத்தி லேயே சந்தைப்படுத்தப்பட்டு வந்தது. இவை எதிரியால் நிறுத்தப்பட்டதால், இன்று சிறிலங்காவின் 1/3 பகுதி உற் பத்திகள் தேங்கியுள்ளன. 1/3 பகுதி தொழிலாளர்களின் வேலை முடக்கப்பட்டுள்ளது. 1/3பகுதி இலாபம், வரிப்பணம் என்பன அவனுக்குக் கிடைக் காமல் போயிற்று

அதேவேளை எமது மக்கள் இவற்றிற்கான மாற்றுப் பொருள்களை இங்கேயே உற் பத்தி செய்யத்தொடங்கினர். அதனால் வேலைவாய்ப்பற்று கொடிய வறுமையால் வாடிக் கொண்டிருந்த பல தமிழ் மக் கள் வேலைவாய்ப்பை இங்கு பெற்றனர். எமது பணம் சிறி லங்காவிற்குச் செல்லாமல் இங்கேயே பயன்படுத்தப்பட் டது. புதிய தொழில் நுட்பங் கள் வர ஆரம்பித்தன. பல இடர்ப்பாடுகள் இருப்பினும், உற்பத்திகள் அதிகரிக்கத் தொடங்கியது; மீண்டும் எமது தேசம் தன்னம்பிக்கையுடன் நிமிரத்தொடங்கியது.

சுறுசுறுப்பான கடும் உழைப் பாளிகளாகிய எமதுமக்கள் இவ் வாறு தம்மை நிலை நிறுத்திக் கொள்ளத் தொடங்கியதும் விழித்துக்கொண்ட சிறிலங்கா அரசு இன்று எமது பிரதேசத் தினுள் தனது உற்பத்திப் பொருள்களை அனுப்பி, சிறு கச்சிறுக வளர்ந்து வளர்ந்து வந்த எமது உற்பத்திப் பொருள்களை ஒரேயடியாக நசித்துவிடத் துடிக்கின்றது.

இன்றைய நிலையில், எமது உற்பத்திப்பொருள்கள் அழிக் கப்படுமாயின், இனி என்றைக் குமே அவை தலைதூக்க முடி யாமல் போய்விடும் ஆபத்து நிறையவுள்ளது.

பல்வேறு வசதிகளைக் கொண்ட அந்நிய உற்பத்தியா ளர்களின் பொருள்களுடன் தரத்திலும், விலையிலும் எமது உற்பத்திப் பொருள்கள் ஆரம்பத்தில் போட்டி போட முடியாமல் இருப்பினும், காலக்கிரமத்தில் அந்த நிலையை அவை அடைந்து விடும். அதுவரைக்கும் எமது உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும், அவற்றினைப் பாவிப்பதும் எம் ஒவ்வொருவரினதும் கட மையாகும். இதன் மூலமே,

செய்ய முடியும் என்றும், ஆனால் உள்நாட்டுக் கண் காணிப்புக் குழுவொன்று உரு வாக்கப்படுமானால் தமக்கு ஆட்சேபம் இல்லை எனவும் தெரிவித்தனர்.

தோற்கடித்துள்ளது.

# இலங்கை திரும்பிய அகதிகள் குறித்து பேச்சு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய 7500 தமிழ் அகதி கள் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம் ஜா சிறிலங்கா ஜனாதி பதி ஆர். பிரேமதாசவுடன் கலந்துரையாடினார் என பிரட்மன் வீரக்கோன் தெரி வித்துள்ளார்.

'சண்டே ரைம்ஸ், வார பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே சிறி லங்கா ஜனாதிபதியின் ஆலோ சகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அகதிகள் விடயம் மட்டு மன்றி ஏனைய விடயங்கள் குறித்துப் பேசியதாகவும் தெரிவித்தார்.

இதே நேரம் என் எம்.ஜா கடந்த வாரம் சிறிலங்கா வெளிநாட்டமைச்சிடம் விடுத லைப் புலிகள் இயக்கத்தலை வே. பிரபாகரன் பற்றிய மேல திக தகவல் கோரி கடிதம் ஒன்றைக் கையளித்ததாகவும் பிரட்மன் வீரக்கோன் குறிப் பிட்டுள்ளார்.

### ராணுவ

யாத சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைப்பைக்கை விட்டு மீண்டும் முகாம் களுக்குதிரும் பிச்சென்றது.

அப்போது நான்கு அப்பாவி பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதுடன் ஐந்துபேரை கைது செய்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தமோதலின்போது சிறிலங்கா அரசுக்குச் சொந் தமான உலங்கு வானூர்தி தயான்று அப்பகுதியில் தரை றெங்கிச்சென்றுள்ளது.

### தீவகத்திலிருந்து

என்ற வயோதிபரும் அழைத்து வரப்பட்டவர்களில் ஒருவரா வார்.

இதுவரை காலமும் போதிய சிகிச்சை அளிக்கப்படாது இவ் வயோதிபர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழம் தனது கால்களில் நிமிர்ந்து நிற்கும் தகுதியைப் பெற்றுக்கொள்ளும். இவ் வகையில் இன்று சிறிலங்கா விலிருந்து வரும் தும்புத்தடி, விளக்குமாறு. இனிப்பு, மென் பானங்கள், கோடியல், ஜாம் வகைகள் என்பன மீது வரி விதிப்புச் செய்து, எமது உற் பத்தியாளர்களைப்பாதுகாக்க எண்ணியுள்ளோம். அதன் மூலம், பெறப்படும் பணம் எமது உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும், எமது சுயசார் புப் பொருளாதாரத்தை வளர்க்கவும் பயன்படுத்தப் படும். எமக்கு அறிவிக்கப்படா மல் சிறிலங்காவிலிருந்து உள் வரும் மேற்படி பொருள்கள் பறிமுதல் செய்யப்படும். எதிர் காலத்தில் எமது நாடு உலக அரங்கில் பொருளாதார ரீதி யில் வலிமைபெற நாம் அனை வரும் திடசங்கற்பம் பூணு வோம் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

செவ்வாய்க்கிழமை பாட

## வெடி விபத்தில் இருவர் பலி

(சென்னை)

மதுரை மாவட்டத்தில் புலிக்காட்டுப்பட்டி அருகே இடம் பெற்ற வெடி விபத் தொன்றில் இரண்டு தொழி லாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று மதுரைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பாறைகளை உடைக்க வைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகள் வெடித்ததனா லேயே வேலை செய்துகொண் டிருந்த தொழிலாளர்கள் மர ணமடைந்தனர் என்றும், இரண்டு பேர் காயமடைந்த னர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வைக்கப்பட்டுள்ளது.

### புலிகளின்

தளபதி திரு. கங்கைஅமரனும் மங்கள விளக்கேற்றினர். தொடர்ந்து போராளிகள் குடு ப்ப நலன்காப்பகப் பொறுப் பாளர் திரு தமிழ்அன்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த இசை நாடாவின் வெளி யீட்டுரையை விடுதலைப் புலி கள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு யோகி, யாழ். மாவட்ட மகளிர் முன் னணியைச் சேர்ந்த செல்வி ஆர்த்தி, மக்கள் தொடர்பு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு பிரதிப் பொறுப்பாளர் திரு. வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா ஒலிப்பதிவு நாடாவை சம்பிரதாய பூர்வ மாக வெளியிட்டுவைத்தார். முதலாவது ஒலிப்பதிவு நாடாவை கடற்புலிகள் தள பதி திரு. கங்கையமரன் பெற்றுக்கொண்டார்.

இந்த விழாவின்போது ஒலிப் பதிவு நாடாவை உருவாக் குவதில் பங்குபற்றிய கலைஞர் களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. யாழ். மாவட்ட தாக்குதற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. எழில் அரசன் (பாப்பா) நன்றியுரை நிகழ்த்தினார்.

இறுதியில் இக் கலைஞர் கள் நேரடியாக மேடைக்கு வந்து ஒலிப்பதிவுநாடா இசை நிகழ்ச்சியை நடாத்தினர். மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## வீரமரண அறிவித்தல்

### சிவராம் கலைவேந்தன்

### குணதீஸ்வரன் (குணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி 1-ம் ஒழுங்கையை சேர்ந்த வடிவேலு தங்கரத்தினம் (தங்கம்) அவர்களின் மகன் குணதீஸ்வரன் (குணம்) 21.1 92 அன்று கொக்குத் தொடுவாயில் சிறிலங்கா இராணுவத்துடன் நடை பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்து விட்டார் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

15/6 ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மகேஸ்வரன் (ராசன்)
நியூ சுபமாலா மோட்டோஸ்
யாழ்ப்பாணம்

(2300)